24th April 1959]

(ஆ) இந்த வேலைக்காகத் தனிப்பட்ட விவசாயிகளுக்கு மான்யம் கொடுக்கும் உத்தேசம் சர்க்காருக்குண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) There is at present no proposal for granting subsidy to individual cultivators for the reclamation of alkaline lands.

SRI G. G. GURUMURTHI : ஸார், இவ்விதம் ஸப்ஸிடி ஒன்றும் கொடுக்கப்படவில்லையாயினும் அங்குள்ள விவசாயிகளுக்கு போதுமான உரங்கள், நல்ல விதைகள் இவைகளை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு பொதுவாக ஜிப்ஸம் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்த முறையில் மேட்டூர், திருநெல்வேலி ஜில்லாவில் சில பகுதிகள், மதுரை ஜில்லாவில் சில பகுதிகள் இங்கு எல்லாம் இம்மாதிரியான நிலங்கள் இருக்கின்றன. இந்த நிலங்களில் ஜிப்ஸத்தை உபயோகப்படுத்தி அபிவிருத்திசெய்கின்ற முறைகளைப்பற்றி "மேழிச் செல்வத்"தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரிப்பட்ட நிலங்களுக்கு எல்லாம் ஜிப்ஸம் கன்ஸெஷன் முறையில் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

Basic B.T. College, Orathanad

* 138 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஒரத்த நாட்டிலுள்ள பேஸிக் பி.டி. (Basic B. T. College) காலேஜுக்கு புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அப்படியானால் எப்போது ? எவ்வளவு செலவில் ?

(இ) இக்கல்லூரிக்கு விவசாய பயிற்சிக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) A provision of Rs. 1·5 lakhs has been included in the Second Five-Year Plan for this purpose. The buildings are likely to be constructed in 1960–61.

(c) The college has no farm land exclusively for itself. Out of the 4·97 acres of agricultural land belonging to the Government Basic Training School (in the building of which the college is temporarily situated) the college has brought under cultivation one acre.

SRI A. VEDARATHNAM : இந்தக் கல்லூரிக்கு விவசாயத்திற்காக எவ்வளவு நிலம் வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது ? அந்த நிலம் அவர்களுக்கு எப்பொழுது வழங்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் 31 எக்கர் நிலம் விவசாயத்திற்காகவும் கட்டிடத்திற்காகவும் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். முப்பத்தொரு எக்கர் நிலம் வரும்போது குறைந்தது 25 எக்கராவது விவசாயத்திற்கு உபயோகப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[24th April 1959

Sri T. K. SUBBIAH : பேஸிக் ட்ரெயினிங்குக்காக தேவஸ்தான நிலத்தைக் குத்தகைக்கு கொடுத்தால், அது எடுத்துக் கொள்ளப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பேஸிக் பி.டி. காலேஜ் ஒரத்த நாட்டில் இருக்கிறது. பக்கத்திலே தேவஸ்தான பூமி இருக்கிறதா இல்லேயா என்பது எனக்குத் தெரியாது.

C.M.S. Hospital, Vellore

*139 *Q.*—**Sri A. A. RASHEED (on behalf of Sri S. M. ANNAMALAI) :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரிலுள்ள சி.எம்.எஸ். ஆஸ்பத்திரிக்கு 1956, 1957, 1958-ம் ஆண்டுகளில் சர்க்கார் மானியமாகவும் கடனுகவும் கொடுத்தத் தொகை எவ்வளவு ?

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு இனமாக வைத்திய உதவியளிக்கப்படும் ஏழைகள் எத்தனே பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) Rs. 20,000 per year as grant.

(*b*) 25,145 in-patients and 206,014 out-potients per year on an average.

Sri A. A. RASHEED : Sir, is it a fact that patients from one particular community are treated free in the hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU : No. This big number is supposed to have been treated free. These are all free.

Sri K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware that persons belonging to one religion are being treated free of charge without any consideration to their economic status?

The Hon. Sri M. A. MANICKAVELU : If any people are treated free based on economic considerations, we are not concerned with that. We are giving a certain amount as grant. We give Rs. 20,000 as grant. Two lakhs of patients are treated free in the hospital.

Sri T. VELUCHAMI : கிறிஸ்துவ மடாதிபதிகள் இம்மாதிரி இலவச ஆஸ்பத்திரிகள் நடத்துவதுபோல் ஹிந்து மடாதிபதிகள் யாராவது நடத்துகிறார்களா ? அல்லது, அவர்களேத் தூண்டுவதற்கோ வற்புறுத்துவதற்கோ ஹிந்து தர்ம பரிபாலன போர்டு சட்டத்தில் ஏதாவது ஒரு அம்சம் இருக்கிறதா ?

Mr. SPEAKER : மூலக் கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லேயே. அமைச்சர் பதிலளிப்பதாக இருந்தால் அளிக்கலாம்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ராமகிருஷ்ண மிஷன் இம் மாதிரியாக இலவச வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்கிறது.

Sri P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, வேலூர் ஆஸ்பத்திரியானது நமது ராஜ்யத்திலே சிறந்த ஒரு ஆஸ்பத்திரியாக இருப்பதால், அதற்குக் கொடுத்து வரும் மான்யத் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் யோசிப்பார்களா ?